9. கீழைத் திருக்காட்டுப் பள்ளி

தலம் :

திருவெண்காட்டுத் திருக்கோயிலின் மேலைக் கோபுரத்திற்கு மேற்கே அரை கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

தலச்சிறப்பு :

ஆரணியேசுவரர் கோயில் என வழங்கப்படுகிறது. மேற்குப் பார்த்த சந்நிதி, சிறிய கோயில். தென்முகக் கடவுள் சந்நிதிக்கு மேற்கில் கடல் ஒலி போன்ற ஒலி, மதிற் சுவரிலிருந்து கேட்கிறது. விருத்திரா சுரனைக் கொன்ற இந்திரன் இப்பழி தீர இந்திர உலகை ஆள தேவர்கள் பூசித்தத்தலம்.

பதிக வரலாறு:

திருவெண்காடு சென்று பதிகம் பாடிய பின்னர் காழிக் கோமான் இப்பதி போந்து பிற தலங்களைக் காணும் வேட்கை மீதூரலால் வெண்காட்டிற்கு அருகிலுள்ள கீழைத் திருக்காட்டுப்பள்ளியை நண்ணி 'செய்யருகே' எனப் பதிகம் பாடுகின்றார். இப்பதிகத்தில் 2-ஆம் பாடல் கிடைத்திலது. 10 பாடல்களே உள.

திருமுறை 1-5 பண் - நட்டபாடை. பெரியபுராணம் 126.

இறைவன் : ஆரணிய சுந்தரேசுரர்.
இறைவி : அகிலாண்ட நாயகி.
தீர்த்தம் : அமிர்தபொய்கை.

திருச்சிற்றம்பலம்.

1. செய்யரு கேபுனல் பாயஓங்கிச்
செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழை ஈன்று
கானல்எல் லாம்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேஅழல் வாயவை வாய்ப்
பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேஉடை யானை உள்கி
விண்டவர் ஏறுவர் மேலுலகே. 155.

பொ.ரை

கழனியருகே தண்ணீர் பாயவும், கயல்மீன்கள் துள்ளி ஓடிடவும், மருத நில மலர்களிலிருந்து தேன் வழியவும், கைக் கெட்டும் நிலையில் வாழைக்கனிகள் இருக்கவும்; நிலைகொண்ட மணம் கமழும் காட்டுப் பள்ளியாம். ஐந்தலை அரவினை படுக்கையாகக் கொண்ட திருமால், உமையைப் பாகமாகக் கொண்ட ஈசனை நினைத்து வணங்கி இன்புற்றார். இதனை நினைந்து வாழ்வார்க்கு உயர்ந்த உலகம் கிட்டும்.

2. பாடல் கிடைக்கவில்லை.

3. திரைகள் எல் லாமல ரும் சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகள்எல் லாம் அணி சேர்ந்து உரிஞ்சிக்
காவிரி கால்பெரு காட்டுப்பள்ளி
உரைகள் எல் லாம் உணர்வு எய்திநல்ல
உத்தம ராய்உயர்ந் தார் உலகில்
அரவம்எல் லாம் அரை ஆர்த்தசெல்வர்க்கு
ஆட்செய அல்லல் அறுக்கலாமே. 156.

பொ.ரை

காவிரி ஆற்றின் நீர்நிலைகள் எல்லா மலர்களையும் சுமந்து தன்பால் தேக்கி, செழுமையான மணிகளும் முத்துகளும், பொன் மணிகளும் வாரி வாய்க்கால்களின் வழியாக இருகரைகளும் மோதும்படி ஆரவாரித்துச் செல்கின்றன. இத்தகைய சிறப்புடைய தலம் திருக்காட்டுப் பள்ளி. ஆண்டு மறைகள் யாவற்றையும் உணர்ந்து அதன் வழியே நடந்து உத்தமராய் உயர்ந்தனர். அரவத்தைத் தரித்து வாழும் இவ்வீசனை வணங்க அல்லல் அறும்.

4. தோலுடை யான் வண்ணப் போர்வையினான்
சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கு
நூலுடை யான்இமை யோர் பெருமான்
நுண்ணறி வால்வழி பாடுசெய்யும்
காலுடை யான்கரிது ஆயகண்டன்
காதலிக்கப் படும் காட்டுப்பள்ளி
மேலுடையான் இமை யாதமுக்கண்
மின்னிடை யாளொடும் வேண்டினானே. 157.

பொ.ரை

புலித்தோலை உடையாகக் கொண்டவன்; யானையை உரித்தத் தோலை அழகிய போர்வையாகக் கொண்டவன்; ஒளிவீசும் திருவெண் ணீற்றினைப் பூசியவன்; மார்பில் முப்புரிநூலினைத் தரித்தவன்; விண்ணவரின் தலைவன்; மெய்யறிவால் வழிபாடு செய்யத்தக்க திருவடியை உடையவன்; கருமையான கண்டத்தைக் கொண்டவன்; இத்தகைய இறைவன் காட்டுப்பள்ளியை விரும்பி அமர்ந்து இருப் பவன்; இப்பிரான் உமையை விருப்போடு தன் பாகத்தில் கொண்டவன்.

5. சலசல சந்துஅகி லோடும் உந்திச்
சந்தன மேகரை சார்த்தி எங்கும்
பலபல வாய்த்தலை ஆர்த்துமண்டிப்
பாய்ந்து இழி காவிரிப் பாங்கரின் வாய்க்
கலகல நின்று அதிரும் கழலான்
காதலிக் கப்படும் காட்டுப்பள்ளிச்
சொலவல தொண்டர்கள் ஏத்தநின்ற
சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே. 158.

பொ.ரை

சலசல எனும் ஒலியுடன் சந்தனமும் அகிலும் உந்திச் சென்றாலும், சந்தனத்தைக் கரையில் சேர்த்து எல்லா இடங்களிலும் வாய்க்கால் களாகப் பரவும் காவிரியின் அருகில் கலகல என்று ஒலி தரும் கழலைக் கொண்டவனாகிய ஈசன் விரும்பும் காட்டுப் பள்ளியைப் போற்றும் திரு அடியார்கள் மகிழ்ந்து ஏத்தும் சிவன் திருவடியைப் போற்றுவோம்.

சலசல; கலகல - ஒலிக்குறிப்பு. சந்து - சந்தனம்.

6. தளையவிழ் தண்ணிற நீலநெய்தல்
தாமரை செங்கழு நீரும் எல்லாம்
களையவி ழும்குழ லார்கடியக்
காதலிக் கப்படும் காட்டுப் பள்ளித்
துளைபயி லும்குழலி யாழ்முரலத்
துன்னிய இன்னிசை யால்துதைந்த
அளைபயில் பாம்புஅரை ஆர்த்த செல்வர்க்கு
ஆட்செய அல்லல் அறுக்கலாமே. 159.

பொ.ரை

நீல வண்ணங் கொண்ட நெய்தல் மலர்களும், தாமரை மலர்களும் பொய்கைத் தண்ணீரும், கூந்தல் கொண்ட பெண்களால் மணம் பரவும்

நன்மை கொண்டு விரும்பப்படும் பெருமை கொண்டது காட்டுப்பள்ளி. அத்திருத்தலத்தில் குழலோசையும், யாழ் ஒலியும் இணைந்து இசைக்க அதனால் ஆட்கொள்ளப் பெற்று, அரவினை அரையில் பொருந்தக் கட்டிய செல்வனான ஈசனுக்கு அடியவராய் இருந்து திருத் தொண்டாற்றினால் இடர் இல்லை.

7. முடிகையி னால் தொடும் மோட்டுழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின் கட்டிக்
கடிகையினால்எறி காட்டுப்பள்ளி
காதல்செய் தான்கரிது ஆயகண்டன்
பொடியணி மேனியி னானை உள்கிப்
போதொடு நீர் சுமந்து ஏத்தி முன்னின்று
அடிகையினால் தொழ வல்ல தொண்டர்
அருவினை யைத்துரந்து ஆட்செய்வாரே. 160.

பொ.ரை

வயல்களில் நாற்று முடிகளை வேர் அறுதல் இன்றிப் பக்குவமாகப் பறித்துக் கட்டியும், கரும்பின் கட்டிகளைக் (வெல்லம்)கைகளால் வலிமையுடன் உடைத்து வாழும் உழவர்கள் நிறைந்த காட்டுப் பள்ளியை விரும்பி மேவும் இறைவன் கருமையான கண்டத்தைக் கொண்டவர்; திருநீறு பூசிய திருமேனியர்; அவரை நினைத்து மலர் வழிபாடு செய்து, நன்னீரால் ஆட்டி, நல்லுரை கூறி திருவடியை வணங்கும் திருத் தொண்டர்கள் கண்களுக்கும் புலப்படாத வினையையும் அகற்றி வாழ்வர்.

விளக்கம்:

திருவையாற்றுத் திருப்பதிகத்தில் அப்பர்பிரான் (4.3.1) 'போதொடு நீர் சுமந்து ஏத்தி' என்ற தொடருடன் காழிப் பெருமான் அடியினையும் ஒப்பிடுக.

8. பிறைஉடை யான்பெரி யோர்கள் பெம்மான்
பெய்கழல் நாள்தொறும் பேணிஏத்த
மறை உடை யான் மழு வாள் உடையான்
வார்தரு மால்கடல் நஞ்சம் உண்ட
கறைஉடை யான்கனல் ஆடுகண்ணால்
காமனைக் காய்ந்தவன் காட்டுப் பள்ளிக்
குறை உடை யான் குறள் பூதச் செல்வன்
குரைகழ லேகைகள் கூப்பினோமே. 161

பொ.ரை

மூன்றாம் பிறையையுடையவன்; பெரியோர்களின் தலைவன்; வீரக்கழலணிந்த திருவடிகளை விரும்பிப் போற்றப்படுபவன்; மறைகளால் போற்றப்படுபவன்; மழுவுடன் வாளையும் கொண்டவன்; திருமால் துயில்கின்ற பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு அதனால் கண்டம் கருத்தவன்; நெற்றியிலுள்ள தீக்கண்ணால் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியவன்; காட்டுப் பள்ளியில் நேர்த்திக் குறையை நிறைவித்தலை உடையவன்; குறுகிய தன்மை கொண்ட பூதங்களின் தலைவன்; இத்தகு பேராற்றல் கொண்ட திருவடிக்களை உடையானைக் கைகளால் கூப்பித் தொழுதோமே.

மால்கடல் - திருமால் துயில்கின்ற. குறையுடையான் - காட்டுப் பள்ளியில் நேர்த்திக்குறையை நிறைவித்தலை யுடையவன். குறை- குறைந்திருக்கும் பொருள். குரை- பெருமை.

9. செற்றவர் தம் அரணம் அவற்றைச்
செவ்வழல் வாய்எரி யூட்டிநின்றும்
கற்றவர் தாம் தொழுது ஏத்தநின்றான்
காதலிக்கப்படும் காட்டுப்பள்ளி
உற்றவர் தாம் உணர்வு எய்தி நல்ல
உம்பர் உள் ளார்தொழுது ஏத்த நின்ற
பெற்றம ரும்பெரு மானை யல்லால்
பேசுவது மற்றொர் பேச்சிலோமே. 162.

பொ.ரை

பகைவர்களின் அரணாக இருந்த முப்புரக் கோட்டைகளை அழித்து, எரித்துச் சாம்பலாக்கியும், கற்றவர் தொழுதேத்த நின்றும்; என்றும் காட்டுப்பள்ளியை விரும்பிப் போற்றி மகிழும் விடையை உடைய பெருமானைப் பேசுதலின்றி பிறபேச்சும் உண்டோ!

'கற்றவர் தலம் தொழுது ஏத்த' என்ற தொடர் 'கற்றதனால் ஆய பயன்' என்ற குறளிற்கு உரையாயிற்று?

பெற்றம் - காளை.

10. ஒண்துவர் ஆர்துகில் ஆடை மெய்போர்த்து
உச்சிகொ ளாமை உண் டேஉரைக்கும்
குண்டர்க ளோடுஅரைக் கூறைஇல்லார்
கூறுவ தாம்குணம் அல்ல கண்டீர்

அண்டம றையவன் மாலும்காணா
ஆதியி னான் உறை காட்டுப்பள்ளி
வண்டுஅம ரும்மலர்க் கொன்றை மாலை
வார்சடை யான்கழல் வாழ்த்துவோமே. 163

பொ.ரை

காவி வண்ண ஆடையை உடம்பில் ஆடையாகக் கொண்டு உயர்வற்ற உணவினை மிகுதியாக உண்டு உடல்பருத்த சமணர்களோடு, அரையில் ஆடையற்ற திகம்பரர்கள் கூறும் மொழிகள் குணமற்றன. மறையவனான நான்முகனும் திருமாலும் காண முடியா மூலப் பொருளாகக் காட்டுப்பள்ளியில் கொன்றை மாலையுடன், நீண்டு வளர்ந்த சடை முடியோடு உறையும் அப்பெருமானின் திருவடியை வாழ்த்தி வணங்குவோம்.

துவர் ஆர்துகில் - காவியாடை. கொள்ளாமை உண்டு- கொள்ளாத அளவுமிகுதியாக உண்டு. குண்டர்கள்- உடல்பருத்த சமணர்கள். அரைக் கூறை - உடம்பில் உடை.

11. பொன்னியல் தாமரை நீல நெய்தல்
போதுக ளால்பொலி வெய்துபொய் கைக்
கன்னியர் தாம்குடை காட்டுப்பள்ளிக்
காதல னைக்கடல் காழியர் கோன்
துன்னிய இன்னிசை யால்துதைந்து
சொல்லிய ஞான சம் பந்தனல்ல
தன்னிசை யால் சொன்ன மாலைபத்தும்
தாங்கவல் லார்புகழ் தாங்குவாரே. 164.

பொ.ரை

இலக்குமி உறையும் தாமரை மலர்களும், நீல நிற நெய்தல் மலர்களும் இணைந்து சிறப்பேற்படுத்தும் குளத்தில் கன்னிப் பெண்கள் குடைந்து நீராடும் காட்டுப்பள்ளியை விரும்பிய ஈசனைக் காழிக் கோமகனான ஞானசம்பந்தன் இன்னிசையால் கூறிய, செறிந்த தமிழ் மாலைப் பத்தினையும் ஏற்றுப் பாடவல்லார் நீடுபுகழ்பெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தர் சுவாமிகள்

தேவாரம்

(1, 2, 3 திருமுறைகள்)

வரலாற்று முறையில் மூலமும் உரையும்

முதல் பகுதி

உரையாசிரியர்

ஆசிரியரைப் பற்றி...

உரையாசிரியர்
பி.ரா. நடராசன்
மரபுவழிப் புலவர்.
தமிழ் அவரின்
பரம்பரைச் சொத்து.
தந்தை வழியில் அவர்
பெற்ற செல்வங்கள் பல.

கட்டுரை வன்மையும்,
கேட்போர் மகிழும் வண்ணம்
சொற்பொழிவாற்றும் திறனும்
கொண்டவர்.

மாணாக்கர் பெரிதும்
மகிழும் வண்ணம்
கற்பிக்கும்
ஆற்றல் பெற்றவர்.

- வித்துவான்
திரு. ஐயன்பெருமாள் கோனார்



உமா
பதிப்பகம்